No.C.19/2025 11.09.2025

# படைப்பைப் பாதுகாப்போம்

அன்பிற்கினிய இறைமக்களே,

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் ஆசியும் உங்களோடு இருப்பதாக!

"நாம் வாழும் பூமி நம் பொது இல்லம்" என்பது திருத்தந்தை பிரான்சிஸ் நாம் வாழ அழைக்கும் வார்த்தைகள். கடவுள் படைத்த இப்பூமி அழகும் அன்பும் அருளும் நிறைந்தது. மரங்கள், காடுகள், மலைகள், ஆறுகள், கடல், விலங்குகள், பறவைகள் என அனைத்தும் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து உள்ளன. இவற்றைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமை. இன்றைய காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியாலும், புரட்சியாலும் மனிதர் இயற்கையை அளவுக்கு அதிகமாக அழித்து வருகின்றனர். காடுகள் கட்டுப்பாடின்றி அழிக்கப்படுகின்றன, நதிகளும் நீர்நிலைகளும் மாசுபடுகின்றன, பல்லுயிரிகள் விரைவாக அழிந்து வருகின்றன. இதனால் காலநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர்கள், வறட்சி, வெப்பம் போன்ற பல பிரச்சனைகள் உருவாவதை அனுபவிக்கிறோம்.

திருஅவையும் இயற்கையைப் பாதுகாப்பதற்கான அழைப்பை நமக்குத் தருகிறது. படைப்பை பாதுகாப்பது என்பது நீதியின் ஒரு பகுதியும் நம் மனிதாபிமான கடமையுமாகும். திருத்தந்தை லியோ இதற்கான திருப்பலி மன்றாட்டு, வாசகங்களை அங்கீகரித்து ஆணை வழங்கியுள்ளார். எல்லா இடங்களிலும் இதை பயன்படுத்தத் திருவழிபாடு அருளடையாளங்களின் ஒழுங்குமுறை பேராயம் நம்மைப் பணிக்கிறது. இது ஜூன் 8, 2025 பெந்தகோஸ்தே பெருவிழா நாளில் வெளியிடப்பட்டது. ஜூலை 9, 2025 அன்று படைப்பைப் பாதுகாத்தலுக்கான முதல் திருப்பலியை திருத்தந்தை லியோ நிறைவேற்றினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சுற்றுச்சூழல் பற்றியக் கரிசனையும், ஆன்மீகமும் அடங்கிய 'இறைவா உமக்கே புகழ்' (Laudato si) என்னும் திருத்தூது மடலின் பத்தாம் ஆண்டிலே 'படைப்பபைப் பாதுகாத்தலுக்கானத் திருப்பலியை' அங்கீகரித்திருப்பது இப்பூமியைப் பேணுகின்ற நம் பணிகளுக்குத் திருஅவை கொடுக்கின்ற முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழக ஆயர் பேரவையின் முடிவின் அடியொற்றி, ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மூன்றாம் ஞாயிறன்று படைப்பை பாதுகாத்தல் திருப்பலியை (பசுமைத் திருப்பலி) நம் மறைமாவட்ட அனைத்துப் பங்குகளிலும், துறவற இல்லங்களிலும் நிறைவேற்றக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு 21.9.2025 அன்று பசுமைத் திருப்பலியினை பங்குகளில் தவறாமல் சிறப்பிக்க வேண்டுகிறேன். இதற்கான சிறப்புத் திருப்பலி மன்றாட்டுகள், வாசகங்கள் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனைத் திருப்பலி புத்தகத்தில் தவறாது இணைத்துக் கொள்ளவும். ஞாயிறன்று இத்திருப்பலி கொண்டாடப்படும்போது, அன்றைய நாளுக்குரிய வாசங்களைப் பயன்படுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

கடவுளின் வள்ளன்மையிலிருந்து நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமாக நாம் பெறுகின்ற அப்பமும் இரசமும் படைப்பனைத்துமே புனிதப்படுத்தப்படும் நற்கருணையில் படைத்தவருடன் ஒன்றிணைகின்றன. இவ்வாறு சுற்றுச்சூழலை பாதுகாக்கின்றவர்களாகவும் படைப்பு அனைத்தின் பொறுப்பாளர்களாகவும் நாம் அனைவரும் செயல்பட நற்கருணை நம்மை அழைக்கிறது.

பூமியைப் பாதிக்கும் மனிதர்களின் பேராசை, சுரண்டல், மாசுபாடு ஆகியவை களையப்பட வேண்டும். இயற்கையின் அழுகை கடவுளின் அழுகை. கடவுளின் படைப்பை பாதுகாப்பது என்பது நமது நம்பிக்கையின் செயல்பாடாக அமைய வேண்டுகின்றேன். இன்றைய நாளைச் சிறப்பிக்கும் விதமாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சார்ந்த செயல்பாடுகளை நம் பங்குகளில் முன்னெடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** இத்தகவல் 14.9.2025 ஞாயிறு அன்று திருப்பலியின் போது வாசிக்கப்படவேண்டும்.